


सत्यमेव जयते
भारत सरकार

# தேசத்திற்கான சேவை

மகாத்மா காந்தியடிகளின் 150 ஆவது பிறந்த நாள் தருணம்

**4 ஆண்டுகள்** | ரயில்வேத்துறை மற்றும் நிலக்கரித்துறை அமைச்சகங்களின் சாதனைகள் மற்றும் முனைப்பான செயல்பாடுகள்

இந்திய அரசு, 2018



ரயில்வேத்துறை அமைச்சகமும் நிலக்கரித்துறை அமைச்சகமும் மகாத்மா காந்தியடிகளின் 150 வது பிறந்த நாளைக் கொண்டாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றன. தேசம், மகாத்மாவின் வாழ்விலும் அவரது விடுதலை போராட்டங்களிலும் ரயில்களின் பங்களிப்பை நினைத்துப் பார்த்து மகிழ்கிறது. ஆம். ரயில் பயணங்களுக்கும் மகாத்மாவின் வாழ்க்கை சரித்திரத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. காந்தியடிகளின் வாழ்வின் திருப்புமுனை சம்பவம், தென் ஆப்ரிக்க ரயில் பயணத்தின் போது நிகழ்ந்தது. இந்தியாவின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த மகாத்மா காந்தியடிகள் ரயில் பயணங்களையே தேர்ந்தெடுத்தார். மக்களைச் சந்தித்தார். இந்தியத் திருநாட்டின் மக்களுக்கும் தேசத்தந்தைக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திய ரயில்வேத்துறையே, ரயில் பெட்டிகளே இன்று பெருவாரியான இந்திய மக்களை இணைக்கும் சாதனமாகத் திகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலைப் போராட்ட கால கட்டத்தில், ஆயிரக்கணக்கான மக்களுக்கு மிகவும் பிடித்தமான இடங்களாக ரயில் நிலையங்களும் ரயில பெட்டிகளும் விளங்கின. மக்கள் தங்கள் தலைவரைப் பாரத்து மகிழ்ந்து அந்தத் தலைவர்கள் காட்டிய வாய்மை மற்றும் அகிம்சைப் பாதைகளையும் விடுதலை வேட்கையையும் பின்பற்றினர்.



# புதிய இந்தியாவை நோக்கி

## தொலைநோக்கு திட்டம் 2022

“ உலகில் நீங்கள் காண விரும்பும் மாற்றமாக இருந்திடுங்கள் ”

மகாத்மா காந்தியடிகள்
(1869–1948)

இந்திய விடுதலைக்கு வழிவகுத்துக் கொடுத்த மகாத்மா காந்தியடிகளின் கொள்கை கோட்பாடுகளைக் கருத்தில் கொண்டும் இந்திய விடுதலையின் 75ஆம் ஆண்டு தருணத்தை முன்னிட்டும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்கள், 2022 ஆம் ஆண்டுக்குள் புதிய இந்தியா என்னும் தொலைநோக்குத் திட்டத்தை அளித்துள்ளார். முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியில் நாட்டை உச்ச நிலையை அடையச் செய்து புதியதோர் இந்தியாவைப் படைத்திட வேண்டும் என்பதில் ரயில்வேத்துறை மற்றும் நிலக்கரித்துறை அமைச்சகங்கள் முனைப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் செயல்பட்டு வருகின்றன.

இந்திய ரயில்வே மூலம் இந்தியாவெங்கும் பயணம் செய்து விடுதலை உணர்வையும் வாய்மையின் சிறப்பையும் மக்களிடையே பரப்பிய மகாத்மா காந்தியடிகள், அட்டைப் படத்தை அலங்கரிக்கிறார். இந்த ஓவியத்தை தமது தூரிகையால் வரைந்தவர் - P. ஷியாம் சுந்தர் ஆசாரி, கிழக்கு கடலோர ரயில்வேயில் பொது நிர்வாகத்துறையில் பணிபுரியும் ஊழியர்

“ இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தின் எஞ்சின் ஆக இந்திய ரயில்வேத்துறை திகழும் ”

நரேந்திர மோடி
பாரதப் பிரதமர்

# பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை

"உகந்த அளவிலான பரிசோதனையே மூன்று - நான்கு மடங்கு குணமடைய செய்து விடும்"

— மகாத்மா காந்தியடிகள்

**118**

2013-14

விளைவுகளால் நிகழும் ரயில் வண்டி விபத்துகளில்

62%

குறைவு

**73**

2017-18

## வேகமாக நடைபெற்ற ரயில் புதுப்பித்தல் பணிகள்

2013-14-ல் 2,926 கிமீ ஆக இருந்த ரயில் புதுப்பித்தல் 2017-18-ல் 4,405 கிமீயாக 50% அதிகரித்துள்ளது.

பாதுகாப்பான LHB பயணப்பெட்டிகளுக்கு முழுமையாக மாற்றம்



## உச்ச நிலை வகிக்கும் பாதுகாப்பு அம்சம்

இதுவரை இல்லாத மிகச்சிறந்த பாதுகாப்பு சாதனை நிகழ்வு 2017-18 - ல்

பாதுகாப்பு தொடர்பான 1.1 இலட்சம் பணியிடங்கள் நியமனம் மூலம் நிரப்பப்பட்டு வருகிறது

# பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை

**ராஷ்ட்ரீய ரயில் சன்ரக்ஷா கோஷ் என்னும் நிதி**

பாதுகாப்பு செலவினங்களுக்காக ரூ. 1 இலட்சம் கோடி தொகை உருவாக்கப்பட்டது ; இதில் ரூ. 16,000 கோடி ஏற்கனவே செலவிடப்பட்டுள்ளது.

---

**நடை மேம்பாலங்கள், இப்பொழுது பாதுகாப்பு தருபவையாக கருதப்படுகின்றது.**

நடைமேம்பாலங்களில் 221% அதிகரிப்பு - 2009-14-ல் ஆண்டொன்றுக்கு கட்டப்பட்ட நடைமேம்பாலங்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்தது ; 2014-18-ல் ஆண்டொன்றுக்கு 74 ஆக உள்ளது

---

**இராணுவத்துடன் இணைந்த கைகள்**

மும்பையில் எல்பின்ஸ்டோன் ரோடு - பரேல், கர்ரி ரோடு மற்றும் அம்பிவாலியில் 3 நடைமேம்பாலங்கள், இராணுவத்தின் உதவியுடன் கட்டப்பட்டது.

---

**அனைத்து ரயில் நிலையங்களிலும் ரயில் வண்டிகளிலும் சிசிடிவி மற்றும் வீடியோ சார்ந்த கண்காணிப்பு அமைப்பு நிலைநாட்டப்பட்டுள்ளன.**

## இது வரை இருந்திராத அதிக அளவில் சாலை மேம்பாலங்கள் / சாலை கீழ்ப்பாலங்கள் / சுரங்கப்பாதைகள் கட்டப்பட்டுள்ளன

ஆண்டொன்றுக்கு சராசரி கட்டுமானத்தில் 3 மடங்கு அதிகரிப்பு




---

**கடந்த நான்கு ஆண்டுகளில் 5,479 ஆள் இல்லாத லெவல் கிராசிங்குகள் அகற்றப்பட்டன.**

ஜூன் 2018-க்குள் முக்கிய மார்க்கங்களில் உள்ள அனைத்து ஆள் இல்லாத லெவல் கிராசிங்குகளும் அகற்றப்பட்டு விடும்.



# மூலதன செலவில் அதிக அளவிலான ஏற்றம்

**2014-19 வருடங்களின் சராசரி ஆண்டு மூலதனச் செலவானது 2009-14 வருடத்தின் சராசரியைக் காட்டிலும் இரு மடங்காகும்**




* பட்ஜெட் மதிப்பீடு 2018-19 உட்பட

"மனிதன் தானே தன் சொந்த விதியை உருவாக்கிக் கொள்ளக் கூடியவன். எனவே உங்கள் விதியை நீங்களே உருவாக்குங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்"

– மகாத்மா காந்தியடிகள்

# திறன் விரிவாக்கம்

## வருங்காலத்திற்கான அடிப்படை வசதிகளை உருவாக்குதல்

**ரயில்வே வழிதடங்கள் விரைவாக நிறுவப்பட்டுள்ளன.**

புதிய வழித்தடங்கள் / இரட்டைப்பாதை / 3 வது மற்றும் 4 வது வழித்தட செயல் திட்டங்கள் நிறுவுதல் சராசரியாக (2009-14) ஆண்டுகளில் 4.1 கிமீ இருந்து 59% அதிகரிக்கப்பட்டு (2014-18) ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 6.53 கிமீ ஆக உள்ளது.



(2009-14) ஆண்டுகளில் ஒரு நாளைக்கு **4.1** கிமீ



(2014-18) ஆண்டுகளில் ஒரு நாளைக்கு **6.53** கிமீ

# இணைக்கப்படும் இந்தியா

## ஆக்ட் ஈஸ்ட் கொள்கை

வடகிழக்கில் உள்ள அனைத்து ரயில் கட்டமைப்புகள், அகலப்பாதைக்கு மாற்றப்பட்டுள்ளன.

ஜிரிபாம்-இம்பாலில் புதிய லைன்செயல் திட்டத்தில், உலகிலேயே மிக உயரமான பாலங்களில் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

மேகாலயா உடன் ரயில் இணைப்பு மேகாலயா (தூத்னி-மெண்டிபத்தர்), திரிபுரா (குமர்காட்-அகர்தலா) மற்றும் மிசோரம் (கதகல்-பைராபி) உடன் ரயில் இணைப்பு நிறுவப்பட்டுள்ளது

1,397 கிமீ தூரமுள்ள புதிய வழிதடத் திட்ட பணிகள், ₹ 51,428 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# புறநகர் கட்டமைப்புகளில் முக்கியத்துவம்

**பெங்களூர் புறநகர் அமைப்புக்காக ₹ 17,000 கோடி 2018-19 பட்ஜெட்டில் ஒதுக்கீடு**

இதனால் 15 லட்சம் பயணிகள் பயன் பெறுவார்கள்

நவீன அமைப்புகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பயணப் பெட்டிகள், அதிநவீன சிக்னல்கள் மற்றும் அதிநவீனமயமாக்கப்பட்ட ரயில் நிலையங்கள்.

**மும்பை புறநகர் அமைப்பு மேம்பாட்டுக்காக ₹ 54,777 கோடி, 2018-19 பட்ஜெட்டில் ஒதுக்கீடு**

புதிய தாழ்வாரங்கள், கூடுதல் வழித்தடங்கள் / நீட்டிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட சிக்னல்கள்

பயணிகளின் பயண அனுபவத்தை இனிதாக்கும் குளிரூட்டப்பட்ட பயணப் பெட்டிகள் மற்றும் நன்றாக புதுப்பொலிவூட்டப்பட்ட ரயில் நிலையங்கள்



# இந்தியாவின் முதன் முதல் புல்லட் ரயில் வண்டி

## மும்பை அகமதாபாத் அதிவேக ரயில் வண்டி

ஷிங்கன்சன் தொழில்நுட்பம் கொண்ட இதில் 50 ஆண்டுகளில் இறப்புகளின் பதிவானது பூஜ்யமாக உள்ளது ; அது மட்டும் அல்ல ரயிலின் தாமத நேரம் ஒரு நிமிடத்திற்கும் குறைவானதாகும்.

பயண நேரம் 8 மணி நேரத்திலிருந்து 2 மணி நேரமாக குறையும்.

ஜப்பான் அரசாங்கத்தின் குறைவான ஆக்க செலவு நிதியானது குறைந்தபட்ச வட்டி விகிதத்தால் சக்திக்கேற்றதாக்குகிறது.

மிகப்பெரிய அளவிலான நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள்

'மேக் இன் இந்தியா" இந்தியாவை அதிவேக தொழில்நுட்பத்தில் தலைமை நிலைக்கு உயர்த்துகிறது.

“வாழ்க்கை என்பது பெரும் நாட்டங்கள் கொண்டது ; பாடுபட்டு முழுமையை அடைவதே அதன் நோக்கம் அந்த முழுமைதான் தன்னைப்பற்றி தானே நன்கறிதல்”

— மகாத்மா காந்தியடிகள்

# மேக் இன் இந்தியா

## பீகாரில் மாதேபுராவில் உள்ள எலக்ட்ரிக் லோகோமோட்டிவ் தொழிற்சாலை





ஹால்டியாவில் உள்ள டீசல் எலக்ட்ரிக் மல்டிபில் யூனிட் (DEMU) ரேக் தயாரிக்கும் தொழிற்சாலை




## வரவிருக்கும் திட்டங்கள்

லாட்டூர், மராத்வாடாவில் புறநகர் மற்றும் மெட்ரோ பயணப் பெட்டி தயாரிக்குமிடங்கள்

அஸ்ஸாமில் உள்ள நியூ பொங்காங்காவனில் LHB பயணப்பெட்டிகளை புத்தாக்கம் செய்வதற்கான தொழிற்சாலைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அஸ்ஸாமில் உள்ள லும்டிங்-ள் DEMU / மெயின்லைன் EMU ஷெட்டுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஜான்சி, புண்டேல்காண்ட் மற்றும் ஹரியானாவின் சோனிபட் ஆகிய இடங்களில் பயணப்பெட்டிகளைப் புதிதாக புனரமைப்புச் செய்யும் வசதிகள் அமைக்க திட்டமிடப்பட்டது

“இதன் பின்னர், மனிதனின் உண்மையான சொத்துடைமை எதுவென்றால் அவன் தன்னுடைய சக மனிதர்களுக்குச் செய்யும் நன்மைகள்”

– மகாத்மா காந்தியடிகள்

# மின்மயமாக்கப்பட்ட ரயில்வேத்துறை

**ஒற்றை ஆண்டில் மிக அதிக அளவிலான மின்மயமாக்கல்**

**4,087 RKM**
(2017-18)

More than
6 times Increase

**610 RKM**
(2013-14)

செயல்படுத்துதல்
மிக அதிக அளவில்
அதிகரித்துள்ளது



## வேகம்

உலகில் முதன்முறையாக லோகோமோட்டிவ் - டீசலிலிருந்து எலக்ட்ரிக் ட்ராக்ஷனுக்கு மாற்றம்.

புதிய உள்நாட்டு எலக்ட்ரானிக் லோகோமோட்டிவ் எஞ்சின்கள் 5,000 ஹெச்பி (குதிரை சக்தி) வழங்குகிறது, இது பழைய வழிமுறையை விட 92% அதிகமாகும்.

---

புதிய தலைமுறை 12,000 ஹெச்பி லோகோமோட்டிவ்கள், அதிகரிக்கப்பட்ட ஆற்றல் செயல்திறன் கொண்டதாக உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், சரக்கு ரயில் வண்டிகளின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## சேமிப்புகள்

ஆற்றல் செயல் திறன் எரிபொருள் கட்டணங்களைக் குறைக்க உறுதுணை புரிகிறது.

முழுமையான மின்மயமாக்கல் பணிகளால் ஆண்டுக்கு சுமார் ₹ 13,500 கோடி மிச்சமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது இந்தியாவின் ஆற்றல் பாதுகாப்புக்கு பங்களிப்பதோடு மட்டும் அல்லாமல் வர்த்தக பற்றாக்குறையை மேம்படுத்துகிறது.

## நிலைத்தன்மை

கரியமிலவாயு வெளிப்பாடுகளை குறைப்பதோடு நிலைத்தன்மை மிக்க சுற்றுச்சூழலை வளர்த்தெடுக்கிறது.

## புதிய இரயில்வேக்களில் சிக்னல்

இந்திய ரயில்வேயில் நவீன சிக்னல் அமைப்புகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

---

2017-18 ஆம் ஆண்டில் சிக்னலிங் அமைப்புகளை மேம்படுத்துவதற்கு ₹ 1,299 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது

இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 31% அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

---

2017-18- ல் 208 நிலையங்களில் நவீன தொழில்நுட்பம் கொண்ட மின்னணு பினைப்பூட்டப்பட்ட அமைப்புகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

இது முந்தைய ஆண்டைக் காட்டிலும் 26% அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.






## இந்தியாவின் பொருளாதாரத்தை முன் எடுத்துச் செல்லும்: சரக்கு வர்த்தகம்




2022 ஆம் ஆண்டிற்கான இலக்கானது 33% முதல் 45%"வரை சரக்கு போக்குவரத்திற்கான சந்தையில் உள்ள பங்கை அதிகரிக்க வேண்டும் என்பதாகும்

உள்கட்டமைப்பு மற்றும் சரக்கு வர்த்தக செயல்பாடுகளில் தனியார் பங்கேற்பு ஊக்குவிக்கபபடுகிறது

தனியார் சரக்கு முனைய கொள்கை (PFT) - ஏற்கனவே 58 PFTs கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

---

வேகன்கள் மீது தனியார் முதலீட்டை ஊக்குவிக்கும் புதிய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது.

2013-14 -ல் 1,052 மெட்ரிக் டன் ஆக இருந்த சரக்கு ஏற்றுதல் 2017-18- ல் மிகவும் அதிக அளவிலனாதாக 1,162 மெட்ரிக் டன்னாக சரக்கு ஏற்றுதல் காணப்பட்டுள்ளது. இது 10.5% அதிகரிப்பு என்பது குறிப்பிடத்தக்கது

2017-18 ஆம் ஆண்டில் சரக்கு வர்த்தக வருவாய் ₹ 1.17லட்சம் கோடி ரூபாயாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மேற்குறிப்பிட்ட முந்தைய ஆண்டை விட 12% அதிகமாகும்.



# இந்தியாவின் பொருளாதாரத்தை முன்னேற்றும்: DFCs








## பிரத்தியேக சரக்கு வழித்தடங்கள் (DFCs)

2019-20 ஆம் ஆண்டுகளில் மேற்கு மற்றும் கிழக்கு பிரத்யேக சரக்கு வழித்தடங்கள், (2,822 கிமீ) கட்டம் கட்டமாக அமைக்கப்படும்

மார்ச் 2014 வரை ₹ 12,749 கோடி மதிப்பு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன . ஆனால், கடந்த 4 ஆண்டுகளில் ₹ 39,157 கோடி மதிப்புள்ள ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது (200% க்கு மேல் அதிகரிப்பு)

ஏற்கனவே உள்ள கட்டமைப்பில் சரக்கு போக்குவரத்து நேரம், செலவு மற்றும் பாதைகளில் உள்ள நெரிசல்கள் குறைக்கப்படும்

தொழிற்சாலைகள் மற்றும் பண்ணைகளை துறைமுகங்களுடன் இணைப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன.

பொருளாதார வளர்ச்சியின் மையங்கள் உருவாகும்.









"தூய்மை தெய்வீகத்திற்கு அடுத்ததாகும்"

– மகாத்மா காந்தியடிகள்

# ரயில் நிலைய மேம்பாடு மற்றும் உருவாக்கம்

## வளமான எதிகாலத்திற்க்கான தொடக்கம்

### உலகத்தரத்திலான வசதிகளுடன் கூடியதாக ரயில் நிலையங்கள் வளர்த்தெடுக்கப்பட உள்ளன.

பயணிகளுக்கு சிறந்த வசதிகளுடன் கூடிய இரயில் நிலையங்களை மறுவகைப்படுத்தப்பட உள்ளன.

வருவாய், பயணிகளின் எண்ணிக்கை மற்றும் நுட்பங்கள், வியூக முக்கியத்துவம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட குறிக்கோள் பின்பற்றப்படும்

2019 ஆண்டில் மார்ச் மாதத்தில் 68 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட உள்ளன.

உள்ளூர் கலைகளைக் கொண்டு 60 ரயில் நிலையங்களைப் பொலிவூட்டும் பணிகள் ஏற்கனவே தொடங்கி விட்டன.

டிசம்பர் 2018 ல் மத்தியப் பிரதேசத்தின் ஹபீப்கஞ்ச் நிலையம், மற்றும் குஜராத் மாநிலத்தின் காந்திநகர் நிலையம் ஆகியவை மறுவடிவமைப்பு செய்யப்படும்.

அனைத்து ரயில் நிலையங்களிலும் 100% LED விளக்குகள் பொருத்தப்படும்.








# நினைவில் நிற்கும் ஒரு பயணம்

## பயணிகளின் பயணப்பெட்டிகளை புதிதுப்படுத்தும் பணிகள்

மார்ச் 2019 ல் மெயில் / பயணிகள் ரயில்கள் உள்ளிட்ட 5,000 பயணப் பெட்டிகளின் உட்புறங்கள் மேம்படுத்தப்படும்

நவீன ரயில்கள் மற்றும் பயணப்பெட்டிகள்

இந்த ஆண்டில் முதன்முதலாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ட்ரைன் - செட் நிறுவப்பட உள்ளது

தேஜஸ், அன்த்யோதயா மற்றும் ஹம்சபர் போன்ற ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன

டபுள் டெக்கர் உதய் ரேக் சேவைக்காக தயாராக உள்ளது

அதிநவீன வசதிகளுடன் கூடியதாக தீன் தயாளு மற்றும் அனுபூதி பயணப்பெட்டிகள் உள்ளன.

தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க்கங்களில் கண்ணாடி மேற்கூரை கொண்ட 'விஸ்டாடோம்' இரயில் பெட்டிகள் மூலம் சுற்றுலா பயணிகள் அழகான கண்ணுக்கினிய இயற்கைக் காட்சிகளைக் கண்டு களிக்க முடியும்.








# பரவசமாக்கும் பயணியர் சேவைகள்

## புதிய ரயில்கள்

கடந்த 4 ஆண்டுகளில் 407 புதிய ரயில் சேவைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளில் பண்டிகை கால தேவையை எதிர்கொளள 1.37 இலட்சம் சேவைகள் இயக்கப்பட்டன.

ரயில்வே வசம் உள்ள இயந்திரங்கள், தளவாடங்கள், சொத்துகளை பயன்படுத்துவதன் மூலம் 22 புதிய ரயில்களும் 44 நீட்டிப்புகளும் இயக்கப்பட்டன.

## மூன்றாம் நபர் மூலம் ரகசிய கண்காணிப்பு

100 ரகசிய ஷாப்பர்கள் மூலமாக பயணிகள் வசதிகள், உணவகம், தூய்மைப்பணிகள் மற்றும் நேரந்தவறாமை ஆகியவை கண்காணிக்கப்படுகிறது.

## நேரந்தவறாமை

கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து வருவதன் அடிப்படையில் உருவானதுதான் நேரந்தவறாமை என்னும் சொல் என்றால் மிகையாகாது. ஆனால், நீண்டகால அடிப்படையில் இது விரைவான மற்றும் பாதுகாப்பான ரயில் இயக்கங்களுக்கு வழிவகுக்கும்.

ரயில் வண்டிகளின் கால அட்டவணை உருவாக்கத்தால் ஓட்ட நேரம் குறைகிறது மற்றும் திட்டமிட்ட பராமரிப்பு தொகுதிகள் அனுமதிக்கிறது.

ரயில் வண்டிகளின் கால தாமதம் குறித்து பயணிகளுக்கு குறுந்தகவல் மூலம் தெரிவித்தல் 1,373 ரயில் வண்டிகளில் தொடங்கப்பட்டுள்ளது





# பயணிகளுக்காக உலகத்தர வசதிகள்




## லிப்ட் மற்றும் நகரும் மின் படிக்கட்டுகள்

பயணிகள் சுலபமாக செல்ல வழிவகுக்கின்றன.



# டிஜிட்டல் இந்தியா, டிஜிட்டல் ரயில்



### 675 க்கும் மேற்பட்ட இரயில் நிலையங்களில் அதிவேக Wi-Fi சேவை

எல்லா இரயில் நிலையங்களும் Wi-Fi வசதி அமைக்கப்பட உள்ளது.

இதன் மூலம் அருகிலுள்ள இடங்களில் இளைஞர்கள், பெண்கள், விவசாயிகள் மற்றும் கிராமவாசிகள் பயனடைவார்கள்



### பணமில்லாத பரிவர்த்தனைக்கான பாயின்ட் ஆப் சேல்ஸ் இயந்திரங்கள் (POS)

சுமார் 4,000 அமைவிடங்களில் 9,100 POS இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பில் இல்லை என்றால் உணவு இலவசம் என்னும் கொள்கை: POS இயந்திரங்கள் கட்டாய பில் செய்வதை நடைமுறைப்படுத்தி உள்ளது.

மின்னணு பயணச்சீட்டுகளின் திறனானது 2014 ஆம் ஆண்டில் ஒரு நிமிடத்திற்கு 2,000 டிக்கெட்களில் இருந்து 2018 ஆம் ஆண்டில் ஒரு நிமிடத்திற்கு 20,000 டிக்கெட்டுகளாக அதிகரித்துள்ளது

பயணச்சீட்டு அலுவலகங்களில் பயணச்சீட்டு வாங்க, கிரெடிட் மற்றும் டெபிட் அட்டைகள் மீதான சேவை கட்டணம் நீக்கப்பட்டுள்ளது

பயணிகளின் குறைகள் உடனடியான சமூக வலைதளங்கள் மூலமாக கவனிக்கப்படுகின்றன.












# உணவகம்

2017-18 ஆம் ஆண்டில் 16 அடிப்படை சமையலறைகள், ஏற்கனவே மேம்படுத்தப்பட்டுள்ளன

தரம் மற்றும் சுகாதாரம் மேம்படுத்துவதற்காக அடிப்படை சமையலறைகளில் உணவு உற்பத்தியை கண்காணிக்க செயற்கை கண்காணிப்பு பயன்படுத்தபடுகிறது

E-கேட்டரிங் 314 நிலையங்களில் தொடங்கியுள்ளது மேலும் இன்னும் 100 இடங்களில் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு நாளைக்கு 7,000 க்கும் மேற்பட்ட உணவுகள் பரிமாறப்படும்

அனைத்து உணவு பொருட்களிலும் MRP கட்டாயமாக அச்சிட்டிருக்க வேண்டும் இது 300 க்கும் மேற்பட்ட ரயில் வண்டிகளில் தொடங்கப்பட்டுள்ளது.

டிப்ஸ் கேட்பது எல்லா ரயில் நிலையங்களிலும் தடை செய்யப்பட்டுள்ளது

32 ராஜ்தானி, சதாப்தி, துரண்டோ மற்றும் கதிமான் ரயில்களில் விருப்பமான கேட்டரிங் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

600 ரயில் நிலையங்களில் 1,689 நீர் வழங்கும் இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளது

स्वच्छ भारत
एक कदम स्वच्छता की ओर

# தூய்மை சேவை

**ஒருங்கிணைந்த சுத்தம் செய்யும் இயந்திரங்கள் ஏற்கனவே 488 நிலையங்களில் வழங்கப்பட்டுள்ளன**

அனைத்து புறநகர் மற்றும் பிரதான இரயில் நிலையங்களும் மார்ச் 2019 ஆம் ஆண்டிற்குள் இயந்திரமயமான தூய்மையாக்கல் முறைக்கு மாறும்.

---

**இயந்திரத்தின் மூலம் சலவை செய்வதால் லினன் வகையான துணிகளை சலவைச் செய்வது மேம்படுத்தப்பட்டுள்ளது:**
**2014-18 ஆம் ஆண்டில் 33 இயந்திர சலவையகங்கள் அமைக்கப்பட்டன.**
**2009-14 ஆம் ஆண்டில் 26 சலவையகங்களே இருந்தன.**

டிசம்பர் 2019 ஆம் ஆண்டிற்குள் 100% இயந்திர ரீதியான சலவையகங்கள் அமைக்கப்பட்டு துவைக்கும் துணிகளின் தரம் நன்றாக இருக்கும்.

---

**இலக்குகளுக்கும் அதிகமான எண்ணிக்கையில் பயோ-கழிப்பறைகள் நிறுவப்பட்டுள்ளன.**

நிறுவப்பட்ட பயோ-கழிப்பறைகள் :

2014-18 ஆம் ஆண்டில் 1,17,164 கழிவறைகளும் மற்றும்
2004-14 ஆம் ஆண்டில் 9,587கழிவறைகள் நிறுவப்பட்டுள்ளன

மார்ச் 2019 ஆம் ஆண்டிற்குள் அனைத்து ரயில்களிலும் பயோ-கழிப்பறைகள் அமைக்கப்படும். விமானங்களைப் போன்ற வேக்கம் பயோ- கழிப்பறைகள் அமைப்பது குறித்து பரிசோதிக்கப்படுகிறது.

---

**டிசம்பர் 2018 ஆம் ஆண்டிற்குள் முக்கிய ரயில் நிலையங்களில் மலிவு சுகாதாரத் துப்புரவு இயந்திரங்கள் வழங்கப்படும்**










## இருப்புப்பாதையில் தூய்மையாக்கல்

ரயிலுடன் இனைந்து தானாக சுத்தம் செய்யும் இயந்திரங்கள் டெல்லியில் தொடங்கப்பட்டுள்ளன மேலும் இந்தியா முழுவதும் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது

---

## தன்னிச்சையான மூன்றாம் தரப்பு கண்காணிப்பு

தன்னிச்சையான மூன்றாம் தரப்பு கண்காணிப்பு எல்லா ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் தொடங்கப்பட்டுள்ளன

---

## தூய்மையாக்கல் ஒப்பந்தங்களுக்கு புதிய அமைப்பு

பயணிகள் கொடுக்கும் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தக்காரர்களுக்கான பேமென்ட் வழங்கப்படுகிறது







# சீர்திருத்ததிலிருந்து மாற்றம்: வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை

## சேவைகளுக்கான ஒப்பந்தங்களின் பொது நிபந்தனைகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

போட்டித்திறன் மற்றும் செலவுகளை மிச்சப்படுத்த சேவை ஒப்பந்தக்காரர்களுக்கான எளிதான பதிவு செயல்முறை




## கொள்முதல் நடைமுறைகளில் மாற்றம்

மின்னணு சார்ந்த ரிவர்ஸ் ஏலக் கொள்கை வெளியிடப்பட்டுள்ளது

இதனால் ஆண்டிற்கு ₹ 20,000 கோடி வரை மிச்சமாக ஏதுவாகும்.

---

ஒற்றை வலைத்தளம் மூலம் 100% மின்-கொள்முதல் நடைபெறுகிறது

ஏறக்குறைய 17 லட்ச ஒப்பந்த பதிவுகள் மின்-கொள்முதல் வழியாக வந்துள்ளன

---

IREPS வாயில் வழியாக பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த விற்பனையாளர்களின் எண்ணிக்கை 4 மடங்கு அதிகரித்துள்ளன இது 2014 ஆம் ஆண்டில் 19,867 இல் இருந்து 2018 ஆம் ஆண்டில் 81,127 ஆக அதிகரித்துள்ளது

---

பொதுவாக பயன்படும் பொருட்கள் / சேவைகளின் கொள்முதல் GeM மூலம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது (அரசாங்க மின்-சந்தை இடம்)

## விற்பனையாளர்களை அதிகரிப்பது மற்றும் ஆக்க செலவைக் குறைப்பதன் மூலம் போட்டியிடுவது ஊக்குவிக்கப்படுகிறது

ரயில்வேத்துறை, ஒப்பந்தக்காரர்களுக்கு First in First Out' அமைப்பு மூலம் பட்டுவாடா செய்ய உள்ளது.

---

அனைத்து சப்ளையர்களுக்கும் ஒப்பந்தக்காரர்களுக்கும் லெட்டர் ஆஃப் கிரெடிட் என்பது வழங்கப்படுவதால் அவர்கள், பணி மூலதனம் உருவாக்கிக் கொள்ள உதவி புரிகிறது.

---

ரயில்வேத்துறையின் அனைத்து அமைப்புகளிலும் ரசீது குறிப்புகள், சப்ளையர் பில்கள், ரசீது சலான்கள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டுள்ளன.

இதில் தோராயமாக ₹ 50,000 கோடி மதிப்பு வரையிலான ரசீது குறிப்புகள் மற்றும் ரசீது சலான்கள் அடங்கும்





“'ஒவ்வொரு சீர்திருத்தமும் எழுச்சியைக் குறிக்கிறது. ஒரே ஒரு துறை உண்மையிலேயே விழித்துக்கொள்ளும் போது, வாழ்க்கையின் ஒரு பகுதி சீர்திருத்தம் என நாடு திருப்தியடையாது”

— மகாத்மா காந்தியடிகள்

GeM
Government
e Marketplace

## ரிசர்ச் டிசைன்ஸ் அண்ட் ஸ்டான்டர்ட்ஸ் ஆர்கனிசேஷன் (RDSO) - ல் எளிதான அங்கீகார நடைமுறைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களின் தகவல்கள் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுளளன (RDSO, உற்பத்தி யூனிட்டுகள் ஆகியவை.)

---

செயல்பாடு காலவரையறை - 30 மாதங்களில் இருந்து 6 மாதங்களாக குறைக்கப்பட்டுள்ளது.

# 13 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்ட ரயில்வே குடும்பம்

## கள அதிகாரிகளுக்கு அதிகாரம் / அதிகாரப் பரவல்

அதிகபட்ச வரம்பு வரை, பணிகளை அங்கீகரிக்கும் முழு அதிகாரங்கள் பொது மேலாளருக்கு வழங்கப்பட்டுள்ளன

விரைவான நடைமுறை /முடிவு எடுக்க ஏதுவாக சேவை ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் அதிகாரங்கள், கோட்ட ரயில்வே மேலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

PU க்களுக்கு வெண்டார் பற்றி தீர்மானிக்கும் அதிகாரம்; இதனால் அவர்கள், தங்கள் சொந்த ஆதாரங்களை உருவாக்கி நிர்வகிக்க இயலும்.

“ மனிதத்தன்மையில் நீங்கள் நம்பிக்கை இழந்து விடக் கூடாது. மனிதம் என்பது ஒரு பெருங்கடல். பெருங்கடலின் சில துளிகள் அழுக்காக இருப்பதால் பெருங்கடலே அழுக்கு ஆகி விடாது ”

– மகாத்மா காந்தியடிகள்

## மேம்படுத்தப்பட்ட ஊழியர்கள் நலன்

லோகோ பைலட்டுகள், கார்டுகள், பயணச்சீட்டு பரிசோதகர்கள் ஆகிய ஊழியர்களின் ரன்னிங் அறைகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊழியர்களின் குடியிருப்புகள் மற்றும் பணியிடங்கள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

ரயில்வே பாதுகாப்பு படையின் படை வீரர்களின் குடியிருப்புகள், அவர்கள் குறையின்றி வசிக்க ஏதுவாக புதுவிதமாக ஆக்கப்பட்டுள்ளன.

அனைத்து ஊழியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் தடுப்பு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ரயில்வே பாதுகாப்பு படை ஊழியர்களுக்கு ஆண்டுக்கு இரண்டு முறை மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது.)

## விளையாட்டுகளில் இந்தியாவுக்கு சேரும் பெருமை

இந்தியா சார்பாக வெற்றி பெற்ற அனைத்து சர்வதேச பதக்கங்களில் ரயில்வேயின் விளையாட்டு வீரர்கள், 33% பங்களிப்பை அளித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2018 ஆம் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் மல்யுத்தம் மற்றும் பளு தூக்குதலில் இந்தியா வென்ற 10 தங்கப்பதக்கங்களை ரயில்வே விளையாட்டு வீரர்கள் பெற்றுத் தந்துள்ளார்கள்.

2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் சாக்ஷி மாலிக், வெண்கலப் பதக்கத்தை வென்றார்.











மீராபாய் சானு

# பட்டை தீட்டிய வைரங்களாக உருவாக்கப்படும் தொழில் திறமையாளர்கள்

## வதோதராவில் இந்தியாவின் முதல் தேசிய ரயில் மற்றும் போக்குவரத்து பல்கலைக்கழகம்

தேர்ச்சி பெற்ற தொழில் திறமை கொண்ட மனித வளத்திற்கான ஆதாரத்தை உருவாக்குகிறது

“மேக் இன் இந்தியா “வை மேம்படுத்தி ஆக்கத்தன்மையை விரிவுப்படுத்துகிறது.

நவீனமயமாக்கல் பாதையில் இந்திய ரயில்வேத்துறையை ஈடுபடுத்தி வருகிறது

ஆகஸ்ட் 2018-ல் 2 பட்டப்படிப்புகள் தொடங்கப்பட உள்ளன. அவை : BBA (போக்குவரத்து மேலாண்மை) B. Sc (போக்குவரத்து தொழில்நுட்பம்)

2019 ஆம் ஆண்டில் முதுநிலை பட்டப்படிப்புகள் தொடங்கப்படும்

சமீபத்திய pedagogy & technology அப்ளிக்கேஷன்கள், பணி செயல்பாட்டையும் ஆக்க திறனையும் மேம்படுத்துகின்றன.












## சக்ஷம் செயல்திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் 5 நாட்களுக்கு பணி பற்றிய பயிற்சி / வகுப்பறை பயிற்சி

## தொழில் பழகுநர்களுக்கு பயிற்சி

ரயில்வேத்துறை, ஒவ்வொரு ஆண்டும் தொழில் திறன் சார்ந்த பயிற்சிகளை மொத்த ஊழியர்களில் 5% பேர்களுக்கு வழங்கி வருகிறது.

பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை, 20,000 லிருந்து 31,000 ஆக அதிகரித்துள்ளது.

# நிலக்கரி :
# தேசத்தின் வளர்ச்சிக்கான எரிபொருள்

அகழ்வுக்கான துளையிடுதல்
இரு மடங்காக அதிகரித்துள்ளது
2013-14-ல் 6.9 இலட்சம் மீட்டராக
இருந்தது, 2017-18 - ல்
13.7 இலட்சம் மீட்டராக
உயர்ந்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில்
கோல் இந்தியாவின்
உற்பத்தியில் 105 MT அதிகரிப்பு
2013-14 க்கு முன்பாக,
இதனை எய்த 7 ஆண்டுகள் ஆயிற்று




“ ஒவ்வொரு மனிதனின் தேவையை நிறைவு செய்ய போதுமானதை பூமி தருகிறது ; ஆனால் ஒவ்வொரு மனிதனின் பேராசைக்காக அல்ல ”

— மகாத்மா காந்தியடிகள்

## கோல் இந்தியாவின் நிலக்கரி அகழ்வு 23% ஆக அதிகரித்துள்ளது.




## தனிச்சிறப்பு நிலக்கரியின் தரம்

நிலக்கரியின் தரத்தை சரி பார்க்க மூன்றாம் நபர் மாதிரி நடைமுறை

மின்சார உற்பத்தி ஆலைகளுக்கு 100% உடைக்கபட்ட நிலக்கரி

கோல் இந்தியா மற்றும் Singareni Collieries Company-ன் அனைத்து சுரங்கங்களிலும் ரீ-கிரேடேஷன் (Re-gradation)

## மின்சாரத்திற்கான ஆக்க செலவில் குறைவு

கடந்த 4 ஆண்டுகளில் ஒரு யூனிட் மின்சாரத்திற்காக தேவைப்படும் நிலக்கரியின் அளவு, (குறிப்பிட்ட நிலக்கரி நுகர்வு) 8% ஆக குறைந்துள்ளது.



“என்னால் முடியும் என்று நீங்கள் உறுதியாக நம்பினால், தொடக்கத்தில் தயக்கம்0 இருந்தாலும்0 அந்தப் பணியை செய்து முடிக்கும் ஆற்றலை நிச்சயமாக ஏற்படுத்திக் கொள்வேன்” ”

– மகாத்மா காந்தியடிகள்



# புதிய இந்தியாவில் நிலக்கரி சீர்திருத்தங்கள்

## வர்த்தக ரீதியிலான நிலக்கரி சுரங்க முறை

1973-க்கு பிறகு, நிலக்கரி சுரங்க முறையில் மிகுந்த இலட்சியப்பூர்வமான சீர்திருத்தம்

நிலக்கரி இறக்குமதியை நம்பி இருக்க வேண்டிய சூழ்நிலையை குறைப்பதுடன் உறுதியான நிலக்கரி வழங்கல் மூலமாக ஆற்றல் பாதுகாப்பு ஏற்படும்.

அதிக அளவிலான முதலீடுகள் மூலமாக, நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு

## மின்னணு ஏல முறையில் நிலக்கரி பாளங்கள் ஒதுக்கீடு செய்வதில் வெளிப்படைத்தன்மை

89 நிலக்கரி சுரங்கங்கள், வெற்றிகரமாக ஏலம் விடப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

நிலக்கரி வளம் கொண்டுள்ள மாநிலங்களுக்கு 100% வருவாய்

# வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை

## நிலக்கரி லிங்கேஜ்-க்கான விவேகமான நடவடிக்கை

ஒட்டு மொத்த **55.66 MT** நிலக்கரி கொண்டு செல்வதில் விவேகமான முறை பின்பற்றப்பட்டு ஆண்டுக்கு உண்டாகக்கூடிய மிச்சம் - ₹ **3,359** கோடி

## சக்தி

(இந்தியாவில் நிலக்கரியில் வெளிப்படைத்தன்மைக்கான திட்டம்)

ஏலம் மற்றும் நிலக்கரி லிங்கேஜ்களுக்கான பரிமாற்ற கொள்கை

இதனால் கட்டுப்படி ஆகக்கூடிய மின்சக்தி மற்றும் நிலக்கரி ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை

சக்தி -யின் கீழ், **16** எரிபொருள் உடன்படிக்கைகள் கையெழுத்து ஆகியுள்ளன.

# ரயில் நிலக்கரி உடன்பாடு

நிலக்கரி போக்குவரத்தை அதிகரிக்க ஏதுவாக, குறித்த காலத்தில் நிறைவேற்றும்படி நிலக்கரி அகழ்வுக்கான 14 முக்கிய செயல் திட்டங்களுக்கு காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நீண்டகால எதிர்பார்ப்பு - டோரி - ஷிவ்பூர் ரயில் லைனின் (44 கிமீ) பகுதியான டோரி - பாலுமாத் ரயில் பிரிவு, மார்ச் 9, 2018 அன்று தொடங்கப்பட்டது.

ஒடிசாவில் ஜார்சுகுடா - பாரப்பள்ளி ரயில் லைன் (53 கிமீ) நிறைவடைந்துள்ளது.

## மொத்த நிலக்கரி ஏற்றுதல் அதிகரித்துள்ளது






நிலக்கரி

"பிறர் சேவையில் உங்களை இழந்தாலே
நீங்கள் உங்களை கண்டெடுக்க முடியும்"

— மகாத்மா காந்தியடிகள்

सत्यमेव जयते
भारत सरकार